**சீதா கல்யாண வெண்பா**



1.இராமன் வித்தைகளில் தேர்ச்சி பெறுதல்

கோசலை மைந்தன் குணங்களில் அன்பனே
பாசத்தி லன்று பரதனின் அண்ணனே
புத்தியில் கூர்ந்த பொறுமைத் திலகனே

வித்தையில் கைதேர்ந்த வில்

கோசலை மைந்தன் இராமன் , அன்பான குணங்களுடன், பாசமிகு சகோதரனாய், அறிவிலும் கூர்மையாய், பொறுமையிலும் சிறந்து, வில் வித்தையில் கை தேர்ந்தவனாய் விளங்கினான்.

<u>2.விசுவாமித்திரர் இராம இலக்குவனை அழைத்து செல்ல தயரதன் படும்பாடு</u>

நீலனும் வில்லேந்தி நின்றபடி காத்திட
சீலமுனி யாசகம் சீறியே கேட்டிட
காலம்செய் மாயத்தில் கண்ணீர்ப் பெருகியே
பாலன் பிரிந்திடப் பாடு

விசுவாமித்திரர் தனது யாகத்தை காப்பதற்கு, இராம இலக்குவ சகோதரர்களை அழைத்து செல்கிறார். தனது குமாரர்களைப் பிரிய மனமில்லாமல் தயரதன் வருத்தப்படுகிறார்.

<u>3.அகலிகை சாப விமோசனம்</u>

வில்லை வளைத்து விரும்பி நடந்திட
கல்லிங்கு மெத்தையாய் காட்டி லுறங்கிட
சொல்லின் சுவையோடு சுப்ரபாதம் பாடிட
கல்லையும் காத்திட்டக் காப்பு

காட்டில் யாகம் காக்க இராம இலக்குவன் செல்லும் வழியில், கல்லில் படுத்துறங்கும் கோசலை மைந்தனை எழுப்பவதற்கு விசுவாமித்திரர் 'கௌசல்யா சுப்ரஜா இராமா' என்று பாடிய பாடல் தான் இன்று பலர் வீட்டில் விடியலில் முழங்குகிறது. இந்த

வழியில் கல்லாய் மாறிய  அகலிகை, இராமனின் திருவடி பட்டு  சாப விமோசனம் பெறுகிறாள்.

4.<u>தாடகை வதம்</u>

தாடகை மாண்டுத் தரணியும் காத்திட
வேடத்தில் சாபம் விலகியே நீங்க
மதிமுனி சற்றே மனமும் மகிழ்ந்து
மிதிலைக்குச்  சென்றாரே யன்று

தாடகை வதத்தில் யாகம் காக்கப் படுகிறது. அசுர குலத்தில் பிறந்த தாடகை  தனது சாபம் நீங்கி தேவலோகம் செல்கிறாள். விசுவாமித்திரர் மனம் மகிழ்ந்து, இராமனை மிதிலைக்கு சங்கன் மகளான சீதையின் சுயம்வரத்திற்கு அழைத்து செல்கிறார்.

5.<u>சீதையின் சுயம்வரம்</u>
கூடத்தில் மன்னர்  குழுவாய்க்   குழுமிட
மாடத்தில் அங்கே மறைந்தே யவளும்
முயன்று தவித்து  முடியாமல் மன்னர்
இயம்பி மலைத்தாரே யிங்கு

மன்னர்கள் ஒவ்வொருவராய் வந்து தனது வில்லை முறிக்க முயன்று, முடியாமல் தவிப்பதை சீதை மாடத்தில் இருந்த படி கவனிக்கிறாள்

6.<u>இராமன் வில்லை வளைத்தல்</u>

கண்ணிலே  யண்ணல் கருத்தினைப் பேசிட
விண்ணோடு வித்தகன்  வில்லையு மேந்திட
கன்னம் சிவந்திட காதலும் பொங்கிட
மன்னனை நோக்கினாள் மாது

மாடத்தில் நின்றபடி சீதை இருக்க, அண்ணலும் நோக்கி அவளும் நோக்க, இராமனின் அழகில் சீதை மயங்கினாள். இராமன் வெற்றிகரமாக வில்லை வளைத்தவுடன், அவள் மனம் மகிழ்கிறாள் .

## 7.சீதா கல்யாணம்

வானவர் வாழ்த்திட  மன்னவர்  போற்றிட
தானவர் ஆடிட தாரகைப்  பூத்திட
கோமக னன்புடன் கைப்பிடிக்க நாணிய
பூமகள் நின்றாளே பூத்து

அனைவரின் ஆசியுடன், தேவலோகம் வாழ்த்த, வானத்திலிருந்து பூச்சொரிய, சீதா கல்யாணம் இனிதே நடந்தது.

என் புதிய முயற்சி - வெண்பாவில் சீதா கல்யாணம். குறைகள் இருப்பின் அந்தக் கோசலை இராமன் பொருத்தருள்வான் என்ற நம்பிக்கையுடன் சமர்ப்பிக்கிறேன் .